நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



அருள்நிறை கோகி லாம்பாள் அன்னையின் சரத்தைப் பற்றித்
திருமணக் கோலம் காட்டும் திருமணஞ் சேரி ஈசன்
திருவடி பணிந்தால் வீட்டில் திருமணம் விரைவில் சேரும்
மருவளர் தமிழால் பாடி மலரடி பணிவோம் வாரீர்

ஜூன் 1990

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9
ஒலி 5

பிரமோ
தூத
வைகாசி

ஜூன்
1990

விடையானை மேலுல கேழுமிப் பாரெலாம்
உடையானை ஊழிதோ றூழி உளதாய
படையானைப் பண்ணிசை பாடும் மணஞ்சேரி
அடைவானை அடையவல் லார்க்கில்லை அல்லலே
— திருஞான சம்பந்தர் திருக்கடைக் காப்பு

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி.
மதுரை-625 001

தொலைபேசி: p p. 26668

ஆ[illegible]டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

நாகப்பன் - கீதா திருமணம்

சென்னை கமலா திரையரங்கின் நிறுவனரும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்னாள் தக்காரும் நமது இதழின் ஆசிரியரும் இராங்கியத்தைச் சேர்ந்தவருமான திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் நாகப்பன் B. Com. க்கும் தொழிலதிபர், சோழபுரம் திரு. அண. சுப்பையா செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி கீதா B. Com க்கும் சோழபுரம் மணமகள் இல்லத்தில் 6-5-90 ஞாயிற்றுக் கிழமையன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி அன்று காலையில் சோழபுரத்தில் 'நடிகர் திலகம்' திரு சிவாஜி கணேசன் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் திரு. சொ. சொ. மீ சுந்தரம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். மணமகனின் தந்தை திரு வி என் சிதம்பரம் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

வாழ்த்தரங்கம்

வாழ்த்தரங்கத்தில் 'நடிகர் திலகம்' திரு. சிவாஜிகணேசன், காங்கிரஸ் தலைவர் திரு. ஜி கே. மூப்பனார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர் டாக்டர் திரு. எம் ஏ. எம். இராமசாமிச் செட்டியார், திரைப் படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையா முன்னாள் அமைச்சர்கள் திரு. கே. ராஜாராம், திரு. கே. ஏ கிருஷ்ணசாமி, திரு. கே காளிமுத்து, தொழிலதிபர் திரு பி எஸ். ராமசுப்பிரமணிய ராஜா, நடிகர்கள் திரு. ஜெய்சங்கர், திரு. நாகேஷ், திரு. ராமராஜன், திரு. வினுசக்கரவர்த்தி, திரு. பாண்டியன் திருமதி நளினி ராமராஜன் பாங்க் ஆஃப் மதுரையின் தலைவர் திரு. சுப. சபாபதி மதுரை நகர போலீஸ் கமிஷனர் திரு. செல்வராஜ் தமிழாசரர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை 'சைவ சித்தாந்த வித்தகர்' திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

நேரில் வாழ்த்தியவர்கள்

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் தமது துணைவியார் திருமதி கமலாவுடன் திருமணத்திற்கு முதல் நாளே இராங்கியம் வந்து சுமார் நான்கு மணி நேரம் வி. என். சிடி. அவர்களுடனும் மற்றும் அவர்களது குடும்பத்தாருடனும் அளவளாவினர். திருமணத்தன்று அவர்கள் இருவரும் மீண்டும் சோழபுரத்திற்கு வந்து மணமக்களை நேரில் வாழ்த்தினார்கள். டாக்டர் திரு. எம். ஏ. எம். இராமசாமி செட்டியார் அவர்கள் தமது துணைவியார் திருமதி சிகப்பி இராமசாமியுடன் நேரில் வருகை தந்து வாழ்த்தினார்கள். முன்னாள் அமைச்சர் திரு. கே. காளிமுத்து அவாகளும் மதுரை நகர போலீஸ் கமிஷனர் திரு. செல்வராஜ் அவர்களும் மதுரை துணைப் போலீஸ் கமிஷனர் திரு. எஸ்பி. சேகர் அவர்களும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன் அவர்களும் தமது துணைவியார்களுடன் வந்து நேரில் வாழ்த்தினார்கள்.

தமிழக உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு பொன் முத்துராமலிங்கம் அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. எஸ் திருநாவுக்கரசு, காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம்

டி. வி. எஸ். நிர்வாக இயக்குநர் திரு. ஹரேஷ், ஃபென்னர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். சி. குப்தா, புதுக்கோட்டை இளையமன்னர் திரு. ராஜ், சிவகங்கை இராணி ராஜலக்ஷுமி ரகுராஜ் அம்மையார், திருச்சி S. P. திரு. ரத்தின சபாபதி, திரு. கூத்தகுடி சண்முகம் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திருமதி ராதா தியாகராஜன் திருமதி உமையாள் இராமநாதன் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி நிறுவனர் திரு. சேவு. அண. அண்ணாமலை செட்டியார் கோவை ஆலை அதிபர் திரு. தியாகராஜன் டாக்டர் எம் ஏ. சி எஸ் ராஜேந்திரன், வழக்கறிஞர் திரு பி. எம். கதிரேசன், திரைப்பட இயக்குநர்கள் திரு. என். எஸ். மணியம், திரு கேவதாஸ் பாங்க் ஆப் மதுரையின் முன்னாள் தலைவர் திரு. எல். கிருஷ்ணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. ஆர்எம். சேதுநாராயணன், ஜெயவிலாஸ் பஸ் நிறுவன அதிகாரிகள் போன்றவர்களும் மணமக்களை வாழ்த்தினர்.

வி. என். சிடி. அவர்களின் குடும்ப நண்பரும் வழக்கறிஞருமான திரு. வெங்கா அவர்கள் தமது குடும்பத்தினரோடு மலேஷியாவிலிருந்து வந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தார்.

மற்றும் ''நகரத்தார் குரல்'' ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஆலை அதிபர்கள், கலைஅரங்க உரிமையாளர்கள், திரைப்பட விநியோகஸ்தர்கள் தொழிலதிபர்கள், வணிகர்கள். சுழற்குழு, அரிமா சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், டாக்டர்கள், ஆடிட்டர்கள், வழக்கறிஞர்கள், திருக்கோயில்களின் அதிகாரிகள், அலுவலர்கள் பேராசிரியர்கள், கவிஞர்கள் பெருமளவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்த்துச் செய்திகள்

மணமக்களை வாழ்த்தி பாரதக் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பாரதத்தின் முன்னாள் தலைமை அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள், போலீஸ் I. G. திரு. ஸ்ரீபால் அவர்கள், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் போன்ற முக்கியஸ்தர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

காஞ்சிப் பெரியவர், மேல் மருவத்தூர் திரு. பங்காரு அடிகளார், தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், ஆகியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகளும் பிரசாதங்களும் வந்திருந்தன.

பிரசாதம்

மணமக்களுக்கு மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில், திருவாதவூர் சிவன் கோவில், மதுரை மாரியம்மன் கோவில் திருச்செந்தூர் செந்திலாண்டவர் திருக்கோவில் இராமேஸ்வரம் இராமநாத சுவாமி திருக்கோவில், அம்மாபட்டி அய்யனார் கோவில் இராங்கியம் சிதம்பர விநாயகர் கோவில் ஆகியவற்றிலிருந்து பிரசாதங்கள் வந்திருந்தன.

திருமணத்திற்கு வந்தவர்களை திரு. வி. என். சிதம்பரம் செட்டியாரும் மற்றும் குடும்பத்தாரும் திரு. அண. சுப்பையா செட்டியாரும் மற்றும் குடும்பத்தாரும் வரவேற்று உபசரித்தனர்.

கூட்டுத் திருமணத்திற்கு உதவிய பெண்

திருச்சி நகரத்தார் சங்கம் நடத்தி வரும் கூட்டுத் திருமணங்களுக்கு உதவும் நோக்கில் பள்ளத்தூரைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. இராமநாதன் செட்டியாரின் புதல்வி, தன்னுடைய திருமணத்தில் சீர்வைத்த பொருட்களை (ரூ. 30,000/- மதிப்புள்ளவை) திருச்சி நகரத்தார் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார் என அச் சங்கத்தின் தலைவர் திரு எஸ்பி அருணாசலம் தெரிவித்திருக்கிறார். அப்பெண்ணின் நல்ல உள்ளத்தைப் பாராட்டுகிறோம்.

திருமணம்

திருச்சி நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவர் கோட்டையூர் வெ சா. அண்ணாமலை செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் வெள்ளையன் B.Com க்கும் அரியக்குடி வெ. லெ. வெ இளையபெருமாள் என்ற லெட்சுமணன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அலர்மேலுவுக்கும் 13-5-90 அன்று அரியக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என்.சிதம்பரம்

—53—

பாரீஸிலிருந்து நாங்கள் சுவிட்சர்லாந்துக்குச் சென்றோம். சுவிட்சர்லாந்தில் பேசில், சூரிச் என்ற இரு நகரங்களுக்கும் சென்றோம். சுவிட்சர்லாந்தில் பனி படர்ந்த மலையைப் பார்த்தோம். பனி படர்ந்த மலையிலே ஏறி நடக்க வேண்டுமென்றால் அடிவாரத்திலிருந்து கேபிள்கார் மூலம் செல்ல வேண்டும். மலை உச்சியில் பனிமலை மீதே நடக்கலாம்; பனிக்கட்டிகளை அள்ளி வீசலாம். அந்தக் குளிரிலும் சிலர் புகை பிடிக்க, சிலர் ஐஸ் கிரீம் சாப்பிடுகிறார்கள். சுவிட்சர்லாந்து கடை வீதியில் விதவிதமாக சுவர்க் கெடிகாரங்கள் வைத்து இருக்கிறார்கள். சுவர்க் கெடிகாரங்களை வாங்கி தூக்கிக் கொண்டு வருவதுதான் சிரமம்.



வெனீஸ் நகரத்தை திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் திரு. ஏஎல். பெரியகருப்பன் அவர்களும் சுற்றிப் பார்க்கும் காட்சி



சுவிட்சர்லாந்தில் பனி மலையில் திரு. ஏஎல். பெரியகருப்பன் அவர்கள்.

ஆகவே அலாரம் கெடிகாரத்தை மட்டும் வாங்கிக் கொண்டு வந்தோம். சுவிட்சர்லாந்தைச் சுற்றிப் பார்த்து விட்டு இத்தாலிக்குச் சென்றோம்.

இத்தாலி மிகப் பழமையான நாடு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே ஏற்பட்டது இந்த நாடு. அமெரிக்கா, கனடா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்கெல்லாம் 200 ஆண்டுக் கால சரித்திரம்தான் உண்டு. ஆனால் இத்தாலிக்கோ 2500 ஆண்டுக் கால சரித்திரம் உண்டு. ஆகவே எங்கு பார்த்தாலும் கோட்டைகள், அரண்மனைகள், சர்ச்சுகள் இருக்கின்றன. முதலில் மிலன் என்ற ஊருக்குச் சென்றோம். அங்கு ஒரு பெரிய அரண்மனை இருந்தது. அதைப் பார்த்து விட்டு பர்மா என்ற ஊருக்கு வந்து தங்கினோம் அங்கிருந்த அரண்மனைகள் சிதைவுற்று பெரிய கோட்டைகள் மட்டும் காட்சியளித்தது. அந்தக் கோட்டையிலே எங்கள் வேனை நிறுத்தி இரவு தங்கினோம். அங்கிருந்து பைசா நகரத்திற்குச் சென்றோம். அங்கு உலகப் புகழ் பெற்ற சாய்ந்த கோபுரத்தைப் பார்த்தோம். பைசா சாய்ந்த கோபுரத்

நகரத்தார்களும் செட்டிநாட்டுக் கோவில்களின் நிர்வாகமும்

இராம. முத்தழகப்ப செட்டியார், கோனாபட்டு

செட்டி நாட்டில் உள்ள கோவில்களில், கோவில் காரியங்களைப் பார்ப்பதற்கு, ஒவ்வொரு ஆண்டிற்கும் காரியக்காரர்கள் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படுவதில்லை. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு அந்தந்த ஊர்களில் வசிக்கும் புள்ளிகளை வைத்தும் கோவில் பங்காளிகளை வைத்தும் ''கரை'' எனப் பிரித்து, ஒவ்வொரு கோவில் பங்காளிகளுக்கும் இத்தனை கரை என ஒதுக்கி, வரிசைக்கிரமமாக ஒவ்வொரு கரையிலும் ஒருவர் வீதம், இரண்டு கோவில் பங்காளிகளில் இரண்டு ''கரை''களில் ஒருவர் வீதம் இரண்டு பேர் ஒரு ஆண்டிற்குக் கோவில் காரியங்களைப் பார்த்து வருவார்கள். காரியக்காரர்களை நம் நோக்கத்திற்கு கவனமாய்த் தேர்ந்தெடுக்க நம் விதிகள் இடம் தராது. கோவில் காரியங்கள் அனைத்தையும் அவ்வாண்டு காரியங்களைப் பார்க்கும் இரண்டு கரைகளைச் சேர்ந்தவர்களில் ஒரு கரையினருக்கு நகை எடுத்துக் கொடுப்பது, அதை மீண்டும் வாங்கி வைத்துக் கொள்வது போன்ற காரியத்தையும், மற்றொரு கரையினருக்கு பணம் வரவு-செலவு. கணக்குப் பார்ப்பது போன்ற காரியத்தைப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அதையும் கூட ஒவ்வொரு ஆண்டும் பணம் வரவு - செலவைப் பார்ப்பது இன்ன கரைக்காரர் என்றும், நகை எடுப்பதும் கொடுப்பதும் இன்ன கரைக்காரர் என்றும் பிரித்து வைத்திருக்கிறார்கள். அதைக் கூட நம் நோக்கததிற்கு மாற்ற முடியாது.

தைச் சுற்றி எங்கு பார்த்தாலும் உலக சுற்றுப் பயணிகளே காணப்படுகிறார்கள். அந்தக் கோபுரத்தில் ஏறி இறங்குவதே தனி அனுபவம். எப்படித்தான் அந்தக் காலத்தில் பொறியாளர்கள் அந்தக் கட்டிடத்தைக் கட்டினார்களோ தெரியவில்லை! அதனால் தான் அது உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

அங்கிருந்து வெனீஸ் நகரத்திற்கு சென்றோம். வெனீஸ் நகரம் மிக அழகானது. நான் கல்லூரியில் படித்தபோது சேக்ஷ்பியர் எழுதிய மர்ச்சண்ட் ஆப் வெனிஸ் என்ற கதையைப் பாடமாகப் படித்து இருக்கிறேன். கற்பனையில் கண்ட ஊரை நான் நேரில் பார்த்தபோது மகிழ்ச்சி ஏற்பட்டது. நமது நகரங்களில் வசதி படைத்தவர்கள் வீட்டுக்கு வீடு கார் வைத்திருப்பது போல, வெனீஸ் நகரத்தில் வீட்டுக்கு வீடு படகு வைத்திருக்கிறார்கள். அங்கு ஒரு பெரிய நதி ஓடுகிறது. நதியைச் சுற்றி இரு பக்கங்களிலும் வீடுகள் அமைந்திருக்கின்றன. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல வேண்டுமானால் படகின் மூலமாகத்தான் செல்ல வேண்டும். எனவே வீட்டிற்கு வீடு படகு வைத்து இருக்கிறார்கள். அந்த நகரத்தைய் படகு மூலம் தான் சுற்றிப் பார்த்தோம். பின் அங்கிருந்து ரோமிற்குப் புறப்பட்டோம்.

(வளரும்)

நகைகள் இருக்கும் பெட்டகச் சாவியை நகைகளை எடுப்பது கொடுப்பது போன்ற காரியங்களைச் செய்யும் கரையினர் தான் வைத்திருப்பார்கள். மேற்கண்ட இரு கரையினரும் கோவில் காரியங்களைப் பார்க்கும் காலம் ஒரு ஆண்டு தான். அடுத்த ஆண்டு அடுத்த இரண்டு கரையினைச் சேர்ந்த இரண்டு பேர்கள் கோவில் காரியங்களைப் பார்ப்பார்கள். மேற்படி முறைதான் முன்னோர்கள் காலம் தொட்டே இருந்து வருகிறது.

கோவில் காரியங்களைப் பார்பதற்கே ஊரில் ஆட்கள் கிடையாது அவரவர்களும் தங்கள் தொழில் கருதி வெளியூர்களில் வசித்து வருகிறார்கள் குடநீராட்டு போன்ற பணம் அதிகமாகச் சேர்த்து செய்ய வேண்டிய கோவில் காரியங்களுக்கு நகரத்தார்கள் அனைவரும் ஒன்று கூடி பொதுக் குழுக் கூட்டம் கூட்டி திருப்பணிக் குழு என்று ஒரு குழுவை ஏற்படுத்தி அதற்கு தலைவர், துணைத்தலைவர், செயலாளர், பொருளாளர் குழு உறுப்பினர்கள் என்று அனைத்து நகரத்தார்களும் சேர்ந்து தேர்ந்தெடுப்பார்கள். அத்திருப்பணிக் குழுவில் நடப்புக் காரியக்காரர்களையும் சேர்த்துக் கொள்வார்கள். நம் நகரத்தார்கள் தேர்ந்தெடுப்பது என்பதும் யாரால் எந்தக் காரியத்தை முடிக்க முடியும் என்று பார்த்துத்தான் தேர்ந்தெடுப்பார்கள். ஒருவருடைய முகத்தைப் பார்த்தே இவர்களினால் இதைச் செய்ய முடியும் என்று ஒரு தொடியில் தீர்மானம் செய்யக்கூடிய நுண்ணறிவு படைத்தவர்கள் நம் நகரத்தார் பெருமக்கள். குடநீராட்டு, மண்டலாபிஷேகம் முடிந்து பொதுக்குழுவைக் கூட்டி கணக்கை திருப்பணிக்குழு ஒப்படைத்து விடும். அதன் பிறகு திருப்பணிக் குழு தானாகவே கலைந்து விடும். இது தான் நம் இனத்தினரின் நடைமுறைப் பழக்கம் என்பதை நினைவு கூர விரும்புகிறேன். குடநீராட்டு போன்ற பெரிய பணச் செலவு உள்ள காரியங்களை இரண்டு நடப்புக் காரியக்காரர்களினால் மட்டும் செய்யஇயலாது என்பது தான் நடைமுறை.

ஃ ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு லேனா தமிழ்வாணன் ''நகரத்தார் குரல்'' இதழ்களை தொடக்கம் முதல் 'பைண்டு' செய்து வைத்துப் பாதுகாத்து வருகிறார். அதுபோல் பல அன்பர்களும் பாதுகாத்து வருகிறார்கள்.

ஃ தேவகோட்டை நகரச் சிவன் கோவிலில் 29-5-90 அன்று சேக்கிழாரின் குருபூசை விழாவும் அன்று மாலையில் சேக்கிழார் விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

செல்வி அலர்மேலு சம்பந்தம்

செல்வி அலர்மேலு சம்பந்தத்தின் கனவு ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர் (Surgeon) ஆவது தான் அந்த இலட்சியக் கனவை எட்டிவிடுவதற்காக, கல்விச் சிகரத்தின் கூரிய முனைகளைத் தொட்டுவிடும் அளவு உழைக்கிறார். அவருடைய முயற்சிகளுக்குப் பலனும் விளைகிறது.

அமெரிக்க நாட்டில், போர்ட் சார்லட் (port charlotte) நகரில் உள்ள போர்ட் சார்லட் பள்ளியில் அலர்மேலு ஒரு மேல்வகுப்பு மாணவி. அமெரிக்க நாட்டுப் புளோரிடா மாநிலத்தின் கல்வித் துறை நடத்தும் PRIDE என்ற சிறப்புத் தேர்வில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். (கல்வியில் சிறப்பு நிலை பெறுவதையும் ஆர்வத்தைப் பாராட்டுவதும் இந்த PRIDE தேர்வின் நோக்கம்)

PRIDE தேர்வில் ஆங்கிலம், அறிவியல், கணக்கு, சமூகவியல் என நான்கு பகுதிகள். அந்த நான்கு பகுதிகளிலும் அவர் பயிலும் பள்ளியிலிருந்து வெற்றி பெற்ற ஒரே மாணவி அலர்மேலு தான்.

செல்வி அலர்மேலு சம்பந்தத்திற்கு வயது 17. வாஷிங்டன் பல்கலைக் கழகம் ஒரு எட்டு ஆண்டு மருத்துவப் பட்டப் படிப்பு வகுப்பை நடத்துகிறது. அப்படிப்பில் அலர்மேலுவுக்கு நாட்டம் இருக்கிறது.

காரைக்குடியைச் சேர்ந்த உ. ராம. உடையப்ப செட்டியார் அவர்கள் அலமேலுவின் தந்தை வழி அய்யா ஆவார்கள். தந்தை திரு. உடையப்பா சம்பந்தம் போர்ட் சார்லட் நகரில் ஒரு இதய மருத்துவ நிபுணர் தாயார் திருமதி உமையாள் ஆச்சி. இவர்கள் கடந்த 16 ஆண்டுகளாக போர்ட் சார்லட் நகரில் வாழ்ந்து வருகிறார்கள். அலர்மேலுவுக்குச் சிறிதளவு தான் தமிழ் தெரியும். ஆனால் இந்துமதப் பண்பாடுகளை அவர் பின்பற்றுகிறார்.

''போர்ட் சார்லட் நகரில் சில இந்தியக் குடும்பங்கள் உள்ளன. எனவே இந்தியப் பண்டி



கைகள், மத விழாக்களை முறையாகப் பின்பற்றுகிறோம்'' என்கிறார் அலர்மேலு.

அலர்மேலு பயிலும் பள்ளியில் மு ஆல்பா தீட்டா வணிகக் கழகம் என்ற ஒரு அமைப்பு உள்ளது. நான்கு பிரிவுகள் உள்ள அக்குழுவில் அலர்மேலு உறுப்பினர். கால்குலஸ் Calculus Team) பிரிவில் இடம்பெற்று மிகப் பெரிய கணித மேதைகளுடன் அலர்மேலு போட்டியிட்டும் இருக்கிறார். அம்மேதைகளுடன் ஒப்பிட்டு அவர்களுக்கு நிகரான

மாயமில்லை! மந்திரமில்லை!

மதுரை வங்கியில் வளர் வைப்புத் திட்டத்தில் (Cumulative Deposit) உங்கள் பணம் மிக வேகமாக வளர்கிறது.

வளர் வைப்புத் திட்டம் உங்கள் பணத்தை பன்மடங்காக பல்கிப் பெருகச் செய்கிறது. நீங்கள் ஆச்சரியப்படும் விதத்தில்! உங்கள் எதிர்காலத் தேவைக்கு மொத்தத் தொகையை முதலிடு செய்ய மிக உயர்ந்த திட்டம் இது.

ஒரு ஆயிரம் ரூபாய் காலத்தோடு போட்டிபிட்டுக் கொண்டு என்ன வேகமாக வளர்கிறது பாருங்கள்!

காலம் மாதங்களில் இறுதியில் கிடைக்கும் தொகை.

12	24	36	48	60	120
1093.50	1218.50	1345.00	1485.00	1639.00	2685.50

மதுரை வங்கி லிமிடெட்

உங்கள் வங்கி

மத்திய அலுவலகம்,
758, அண்ணாசாலை,
சென்னை-600 002.

கரு. முத்து. சுபாபதி
சேர்மன்

திறமைசாலி என யாராவது இவரைப் புகழ்ந்தால் அப்புகழுரையை அலர்மேலு பணிவுடன் மறுத்து விடுகிறார்.

1990 ஜனவரியில், எடிசன் கம்யூனிட்டி கல்லூரியிலிருந்து வந்த குழுவினருடன் அலர்மேலு ஒரு போட்டியில் கலந்து கொண்டு சிறந்த இடம் பெற்றார். அச்சிறப்பு இவரது பெருமையை மேலும் உயர்த்துவதாக உள்ளது.

''மருத்துவம் பயில விரும்பும் யாரையும் என் தந்தையார் ஊக்குவிப்பார்கள். தான் செய்யும் பணியை அவர்கள் மிக நேசிக்கிறார்கள். என முடிவையும் அவர்கள் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார்கள்'' என்கிறார் செல்வி அலர்மேலு சம்பந்தம்.

நன்றி: Sarasota Herald - Tribune dt. 13-1-1990

தமிழாக்கம்: கவிஞர் திரு. இராகவன் முத்து

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் மாணவர் ஏ. ஸ்ரீராம் கடந்த மார்ச்' 90ல் நடைபெற்ற பிளஸ் டு தேர்வில் 1200க்கு 1097 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். மதுரை எல்லிஸ் நகர் செவன்த்டே பள்ளி மாணவரான இவர், கணக்குப் பாடத்தில் 200க்கு 200 பெற்றுள்ளார்.



அப்பள்ளியின் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுள்ள இவர் எதிர்காலத்தில் கம்ப்யூட்டர் இன்ஜினீயரிங் படிக்க விருப்பமாக இருக்கிறார். ஸ்ரீராம் கல்வியில் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் அவரது திறமையையும் பாராட்டுகிறோம்.

மிதிலைப்பட்டியைச் சேர்ந்த திரு. ஆர்எம். ஏகப்பனும் திருமதி அழகம்மை ஏகப்பனும் இவரது பெற்றோர் ஆவர். திரு. ஏகப்பன் பொதுநலத் தொண்டர். மதுரையில் லேமினேஷன் தொழில் செய்து வருகிறார்.

முத்தூர் வாணியங்குடி அம்மன் கோவிலில் குட நீராட்டு

நாட்டரசன்கோட்டை அருகே உள்ள நகரத்தார்கள் வாழ்ந்த பூர்வீக கிராமமான முத்தூர் வாணியங்குடியில் புதிதாகத் திருப்பணி செய்யப் பெற்றுள்ள அடைக்கலம்காத்த அம்மனுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் திருக்குட நன்னீராட்டு விழா 13-6-90 (வைகாசித் திங்கள் 30ஆம் நாள்) புதன் கிழமை காலை 7-30 மணி அளவில் நிகழ இருப்பதாகவும் குட நீராட்டையொட்டி 12-6-90 அன்று இருகாலமும் 13-6-90 அன்று காலையில் ஒரு காலமும் ஆக 3 காலம் யாகசாலைப் பூஜைகள் நடைபெற விருப்பதாகவும் எல்லோரும் குட நீராட்டு விழாவில் பங்கு பெற்று அம்மனின் அருளைப் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டுமாயும் அதன் திருப்பணிக் குழுத் தலைவர் பட்டமங்கலம் வீர. நா கருப்பன் செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

6. 'முறைதலை' கொண்டு வரும் முறையற்ற சச்சரவுகள்

தனிப்பட்ட முறையில் யாரையும் நினைத்து இந்தத் தொடர் எழுதப்படவில்லை. என் குடும்பத்திலும் இக்குறைகள் பல இன்றும் காணப்படும். இதை ஒரு சமுக மாற்றமாகச் செய்ய, மனமாற்றம் தேவை. அந்த மனமாற்றத்தை விளைவிக்கவே சிந்தனைகள் தூண்டி விடப்படுகின்றன.

'முறைதலை' என்பது பற்றி எனக்கு விளங்குவதே இல்லை. தொல்காப்பியம், சிலப்பதிகாரம் எல்லாம் எனக்கு ஓரளவு விளங்கியது உண்டு. ''நம்ம வீட்டுக்கு அவுக வந்தபோது நாம் நான்கு வாளி, இருபத்தொரு வாழைப் பழம் ஐந்து தேங்காய்..'' என்று என் மனைவி தொடங்கி, ''அவர்கள் அதற்கேற்பத் திருப்பித்தரவில்லை'' என்ற குறையைச் சொல்லத் தொடங்கும் போது, ஏறத்தாழ எனக்குப் பைத்தியம் பிடிக்கும் நிலை வந்து விடும். ஏதோ இந்த நிலையிலாவது சித்தப்பிரமை வந்துவிடாமல் இருந்தால்தான், அடுத்தடுத்து ஏதாவது செய்ய முடியும் என்பதால், நான் அதை எல்லாம் காதில் வாங்குவது போல், வாங்காமலே ''சரி சரி. விடுவிடு. அடுத்தமுறை நாமும் அதே மாதிரி கொடுத்து, அவுகளை

மனம் புழுங்கச்செய்து விடலாம். அப்பத்தான் புத்திவரும்'' என்று மிக ஆதரவாகப் பேசி முடித்து விடுவேன். 'முறைதலை' என்ற சொல், ஒருவரை ஒருவர் முறைந்துக் கொள்வதால் வந்ததோ என்னவோ!

எல்லா முறைதலைகளையும் அப்படி அப்படியே நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய அசகாய சூரர்கள் நம் இனத்தில் யாரேனும் இருந்தால், அவரைச் சதாவதானி (நூறு செய்திகளை ஒரே சமயத்தில் நினைவுகூரக் கூடியவர்) என்று பட்டம் கொடுத்துப் பாராட்ட வேண்டும்!

இந்த முறைதலைக்குச் சிட்டைவேறு. சிலபோது அட்டைப் புத்தகமாக இருக்கும். 'தோதுச் சிட்டைகள்' வேறு. நகரத்தார் வீட்டு ஆச்சி தோது பார்த்துத்தான் இந்தச் சமூகமே கெட்டுப்போனது. தோது என்ற சொல் கூட நகரத்தாரிடையே தான் மிகுதி. இதைப் பற்றி நம் கவியரசர் டாக்டர் அர. சிங்காரவடிவேலன் போன்றவர்கள் ஒரு சிறு காப்பியமே எழுதலாம்!

ஒவ்வொரு சடங்குக்கும் ஒரு முறைதலை இருக்கிறது. திருப்பூட்டுகிற சடங்குக்கு, மணவறைக்கு, பெண்ணழைப்பதற்கு என்று அவ்வப்போது வாளி: அது என்ன வாளி என்பதிலே தகராறு: ரப்பர் வாளியா? எவர் சில்வரா? பெரிதா? சிறிதா?.. முன்பு இவர்கள் கொடுத்த வாளியே, சம்பந்தி ஆச்சியிடமிருந்து திரும்பி வரும்; சில போது ஒரே வாளி நூறு முறை போய் வரும்; அந்த வாளியில் சிறு நெளிவு கண்டால் தொலைந்தது.

அடுத்தது அதிலே பழம், பிற பொருளகள் எவை எவை? எத்தனை? நல்லதா, அனுங்கலா?

அடுத்தது பணம் எத்தனை ரூபாய்? ரூ. 51, 31, 21 - எது? அதைப் பெற்றுக் கொண்டவர் திரும்பக் கொடுக்க வேண்டுமே. எவ்வளவு கொடுப்பது? ரப்பர் வாளிக்கு ரப்பர் வாளி, சில்வர் வர் வாளிக்குச் சில்வர் வாளி! அதே வாளியா, வேறா? குருச்சேத்திரப் போரில் எந்த அம்புக்கு எந்த அம்பை விடுவது? எந்த அஸ்திரத்துக்கு எதை ஏவுவது? என்று, யோசித்து அம்புகளை ஏவுவது போல நம் ஆச்சிகள் இந்த 'அஸ்திரங்களை' எய்து-ஒருவருக்கொருவர் எதிரெதிரில் நின்று வாதிட்டு முறைதலைச் சண்டையிடும் போது பார்க்க வேண்டுமே!

நீங்கள் கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் எங்கள் வீட்டில் அடிக்கடி சொல்வதுண்டு. நரிக்குறவர் வீட்டுக்கும் நமககும் ஏதோ சம்பந்தம் இருநதிருக்கிறது. அவர்கள் 'காய்மூய்' என அடித்துக் கொள்ளும் பொழுதும் ஒன்றும் விளங்குவதில்லை; நம் முறைதலைச் சண்டைகளிலும் சத்தம் பெரிதாக இருக்கும்; ஒன்றும் விளங்காது.

திருமணத்தில் ஒரு வருஷத்து 'முறைதலைக்கு' என்று பணம் சேர்த்துக் கொடுப்பார்கள். பிறகு ஆண்டுதோறும் 'முறை'யும் கொடுப்பார்கள். மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல, 'முறைதலை'கள் கடைசி காலம் வரை தொடரும். பெண்ணுக்கு 'முறை' என்பது திருமணத்தோடு முடிந்து விடுவதே நல்லது. பிறகு தேவையை அனுசரித்து, சூழல் வசதியைப் பார்த்து அவரவர் கொடுப்பது வாங்குவது நிகழட்டும். இவற்றை எல்லாம் சமுகப் பொதுவிதி ஆக்க வேண்டாம்.

இவ்வாறு சொல்லும் பொழுது

மரியாதை, கவுரவம் எதுவுமே வேண்டாமென்று கூறவில்லை. ஆனால் அவரவர் தேவை வசதிக்கேற்ப, மேலும் அந்த அந்த நிகழ்ச்சிக்கேற்ப. இவை அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். தீபாவளிக்குப் பெண் வீட்டார், தம்பதிகளை அழைக்கலாம். வேண்டியன செய்யலாம். மூன்றாண்டு அல்ல - பல ஆண்டுகள் செய்யலாம். வெளிநாட்டிலிருந்தால் விட்டுவிட நேரலாம்.

பெண்பார்க்கப் போகிறோம். பூ, மஞ்சள், பொட்டு, பழம் கிடைப்பதற்குத் தக கொண்டு போகலாம். அங்கேயே வாளி, வெற்றிலைபாக்கு. பழம் என்று எண்ணிக்கை பார்த்துச் செய்ய வேண்டாம். 'முறை' என்பது அழகான தமிழ்ச்சொல். 'முறை' யாக ஒவ்வொன்றையும் செய்வது சிறந்த நாகரிகம்! அது அளவுக்கு மீறி சமுக விதியாக மாறி. தேவையற்ற சிரமங்களை விளைவிக்கும்போதுதான் அதனை மாறற வேண்டும் எனக் கூற நேர்கிறது. 'முறை' - ஒரு நெறி முறை - ஒருவிதமான நாகரிக வரவேற்பு, வழிவிடுதல் எல்லாம் தேவையே. அதுவே 'முறைதலை' யாகி தலைக்கு வேதனையாவதைத்தான் தவிர்க்கச் சொல்கிறோம்.

நம் முறைதலைப்படி கொடுத்து வாங்குவனவற்றைக் கணக்கிட வேண்டும். ஒரு திருமண வீட்டில், எத்தனை முறை இந்த 'முறைதலை' வருகிறது? யார் யாருக்கு என்னஎன்ன கொடுபடுகிறது? எதற்காக? - என்பன ஆராயப்பட்டால் சுவையாக இருக்கும். சம்பந்திகளிடையே இவ்வாறுமுறைதலைக்காகக் கொடுத்து வாங்கப்பட்டவைகளை, முழுவதுமாக ஒருவர் பட்டியலிட்டுக் கணக்கிட்டால், கடைசியில் அவரவர் வாளி (எண்ணிக்கை) அவரவரிடமும் அவரவர் பொருள்கள் அவரவர்களிடமுமே இருக்கக் காணலாம். நிகரலாபம் என்பது அதனால் விளைந்த சண்டை, சச்சரவுகளே!

எவ்வளவோ நிறையுடைய சமுதாயம் 'முறைதலை' என்ற குறையை இன்னும் வைத்துக் கொள்ள வேண்டுமா? காலத்திற்கேற்ப இதில் மாற்றங்கள் செய்யலாகாதா? நகரத்தார் சங்கங்கள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டாமா?

(வளரும்)

குங்குமம்

நெற்றியில் இட்டுக்கொள்ளும் குங்குமத்தை நல்ல தமிழில் கூறவேண்டுமா? வயதான ஆச்சி ஒருவரைக் கேளுங்கள். ''திருச் சூரணம்'' என்று அதைச் சொல்வார்கள். சூரணம் என்றால் குழைப்பதற்கு ஏற்ற மெல்லிய தூள் (Fine Powder) என்று பொருள். பழைய நாட்களில் மருந்துகள் சூரண வடிவிலேயே இருந்ததால், மருந்துச் சூரணத்திலிருந்து வேறுபடுத்தவும், மகத்துவம் தெரியும்படியும் இந்தப் பொடியைத் ''திருச் சூரணம்'' என்றார்கள். இறையருள் பிரசாதத்தில் திருநீறு, திருமண் என்பதுபோல நெற்றியில் இடும் குங்குமத்திற்கும் ''திரு'' என்ற அடை விளங்க ஆச்சிமார்கள் இதைத் 'திருச் சூரணம்' என்றழைப்பர்.

(கோனபட்டு நகரச் சிவன் கோயில் குடமுழுக்கு விழாவில் கேட்டது.)

— கவிஞர் இராகவன்முத்து

நவக்கிரக குட நீராட்டு

தேனிபட்டி அகத்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவிலில் நவக்கிரகத்தை இடம் மாற்றி அமைத்து, மருந்துசாத்தி 7-5-90 அன்று காலை 9-55 மணிக்கு குடநீராட்டு சிறப்பாக நடைபெற்றது.


நவக்கிரக குடநீராட்டுக்கு முன்பு தேனிபட்டி கீழ ஊரணி கரைமேல் அமைந்திருக்கும் சிதம்பர விநாயகருக்கும் மருந்து சாத்தி 7-5-90 காலை 9-20 மணிக்கு குடநீராட்டு சிறப்பாக நடைபெற்றது.

நகரத்தார் பெருமக்கள் திரளாக வந்திருந்து குடநீராட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.




கல்லல் திரு. ஆ. மு. ஆ. முரு. சுப. மலைபாண்டி செட்டியார் - திருமதி சௌந்தரம் ஆச்சியின் 79 ஆம் ஆண்டு நிறைவு விழா 8-4-90 அன்று திருக்கடையூரில் சிறப்பாக நடைபெற்றது. சென்னை, மதுரைப் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


நாகப்பன் - கீதா திருமணப் படங்கள்




மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்னாள் தக்கார் இராங்கியம் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் நாகப்பன் B. Com.க்கும் தொழிலதிபர் திரு. அண. சுப்பையா செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி கீதா B. Comக்கும் சோழபுரத்தில் 6-5-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.




மணமக்களுடன் ஆழ்ந்த சிரிப்புக்கிடையே தமிழக உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் அவர்களும் திரு. வி. என். சிடி. மற்றும் குடும்பத்தாரும்.




திருமண விழாவில் மணமக்களுடன் (இடமிருந்து வலமாக) திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், டாக்டர் திரு. எம். ஏ. எம். இராமசாமி, திரு. ஜி. கே. மூப்பனார், திரு. சிவாஜி கணேசன் முன்னாள் அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.




மணமக்கள் - செல்வன் நாகப்பன் செல்வி கீதாவுடன் மண மகளின் தந்தை திரு. அண. சுப்பையா செட்டியார் மண மகளின் தாய் திருமதி சரோஜா சுப்பையா.



திருமண விழாவில் மணமக்களுடன் (இடமிருந்து வலமாக) திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, திரை நட்சத்திரங்கள் திரு. சிவாஜி கணேசன், திரு. ஜெய்சங்கர், திரு. ராமராஜன், திரு. பாண்டியன்.



மணமக்களை வாழ்த்திப் பேச வந்த திருமதி நளினி ராமராஜனுக்கு திரு. வி. என். சிடி. அவர்களின் புதல்வி திருமதி ஆனந்தி பெரியகருப்பன் பொன்னுடை அணிவிக்கும் காட்சி.



மணமக்களுடன் மணமகளின் பெற்ருேரும் மலேஷியா வழக்கறிஞர் திரு. வெங்கா அவர்களும் அவர்களது துணேவியாரும்.



திருமணச் சடங்கு நிகழ்ச்சியில் மணமகனின் தாய் திருமதி கமலா சிதம்பரம் அவர்களும் மணமகளின் தாய் திருமதி சரோஜா சுப்பையா அவர்களும்.



6. மருமகள் வரவு ஒரு மங்கல வரவு

அன்புள்ள அண்ணனுக்கு,

திருமணப் பேச்சில் இன்று வளர்ந்துள்ள வணிக மனப்பான்மை, அதனைச் சமுதாய நன்மையிலிருந்து பிரித்து விடுகின்றது. குடும்ப வளர்ச்சி, பிள்ளைகளின் அறிவு – பண்பு - பண்பாட்டு வளர்ச்சி, கணவன் - மனைவியின் சீரான இனிய உறவு, இவற்றின் மூலம் சமுதாய நன்மை என்ற நோக்கில் திருமணம் நடத்தப்பட வேண்டும். ஆனால் இன்று இவை எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பணம் பற்றிய பேரமே தலை தூக்கி நிற்கின்றது.

பேசிமுடித்த திருமணத்தில் கூட, வேறு இடத்தில் வரதட்சினையோ, நகையோ கூடுதலாகக் கிடைக்குமென்றால், பேச்சு முறிந்துபோவது என்பது, இப்பொழுது நாம் புதிதாகக் கேள்விப்படும் செய்தி. பண நோக்கு உடையவர்கள் அதைச் சாதாரணமாக நினைக்கின்றார்கள். கலியாணப் பையன்-பெண் மனத்தை அது எவ்வாறு பாதிக்கும் என்ற எண்ணமே அவர்களுக்கு இருப்பதில்லை. மேலும் 'நகரத்தார் நாணயமானவர்கள்; சொன்ன வாக்குத் தவறாதவர்கள்' என்ற மரபுப் புகழையும் மறந்து விடுகிறார்கள்.

திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர். ஒரு தலைமுறையில் வந்து

சேரும் மருமகளால், ஒரு குடும்பத்தின் போக்கே மாறிவிடும். பெண்ணின் பண்பு, அறிவு, பாங்கு - இவற்றை வைத்துத் தான் குடும்பத்தின் வளர்ச்சி, வெற்றி. அடுத்த தலைமுறைக்குப் பண்பாட்டுத் தொடர்ச்சி ஆகியவை கிடைக்கப் பெறவேண்டும் ஆதலால், பெண் கொள்ளும் குடும்பத்தைப் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். ஆனால் இன்று பெண்ணின் தந்தை எவ்வளவு வரதட்சிணை தருவார் என்று பார்க்கின்றனரே தவிர, அவருடைய பண்பு, படிப்பு, மற்ற தகுதிகள், குடும்பச் சிறப்பு என்பவற்றைக் கருதுவதில்லை. தன் பெண் திருமணத்திற்கு அவரும் 'கலியாணச் சந்தையில்' போட்டியிட்டேயாக வேண்டும். இந்த நிலை இன்று தோன்றியுள்ளது, நம் சமூகப் பண்பாட்டு வளர்ச்சிக்கு நல்லதல்ல. நல்ல குடும்பங்கள் திருமணத்தின் மூலம் இணைய வேண்டும். திருமணப் பேச்சில் முதலில் குடும்பச் சிறப்பு, மணமக்களின் பெற்றோரின் பண்பு நலம் ஆகியவை நன்கு விசாரிக்கப்பட வேண்டும்.

மணப்பெண்ணின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அவளது கல்வியறிவைப் பொறுத்தே பிள்ளைகளின் அறிவுக் கூர்மையும் அமையும். அவர்களின் கல்வியை, படித்த தாய் தான் கண்காணிக்க முடியும் ஆனால் கலியாணச் சந்தையில் படித்த பெண் - படிக்காத பெண் - இருவரும் ஒரே நிலைதான். படித்த பெண்ணுக்கு உள்ள மற்றொரு பிரச்சினை, அவள் தன்னை விட அதிகம் படித்த மாப்பிள்ளையைத் தான் மணக்க நினைக்கின்றாள். 1 பட்டம், 2 பட்டம் தொழிற்கல்விப் பட்டம், வெளிநாட்டுப் படிப்பு, வெளிநாட்டில் வேலை - என்ற இந்தத் தரங்களுக்குத் தக்கபடி, வரதட்சிணை படிப்படியாகக் கூடுதலாகக் கேட்கப்படுகின்றது. 'என் பையனை வெளிநாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்கப் போகிறேன்.' ஆதலால் 'இவ்வளவு' வேண்டும் என்று கேட்கிறார்கள்.

பணத்தோடு நிற்கவில்லை. நகைகள், ஸ்கூட்டர் முதலியவையும் கேட்கப்படுகின்றன. பெண் வேலையில் இருந்தால், 'சம்பாதிக்கிறாள்; அவளுடைய வருமானமும் உதவியாக இருக்கும்' என்று அதற்காக, வரதட்சிணையைக் குறைப்பது இல்லை. மருமகள் வரவு ஒரு மங்கல வரவு என்று நினைப்பதை விட்டு, அதை ஒரு பண வரவாக எண்ணுகிறார்கள். அவள் பணம் ஊறும் ஊற்று என்று கருதப்படுகின்றாள். இந்த நிலையால், பெண்கள் படும் துன்பங்களுக்கு எல்லையேயில்லை. திருமணத்திற்கு முன்பு, அது ஆகவில்லை என்ற கவலை. ஆனபின்போ, ஏன் ஆயிற்று என்ற நிலை.

ஒரு தந்தை தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்கும் போது, அவருக்கு அவள் செலவு (செல்லுதல்) 'வாழ்வதற்குச் செல்வம் செலவாகத் தோன்றுவதை விட பெரும் பொருட் செலவாகத் தோன்றுகின்றது. நம்மில் பலர் பணிகளில் உள்ளவர்கள் தாம். மாத வருமானம் வாழ்க்கைக்கே போதாத நிலையில், கலியாணச் சந்தையில் போட்டியிட வேண்டிய நெருக்கடியில் தள்ளப்படுகிறார்கள், திருமணம் செய்யாமல் பெண்ணை வீட்டில் வைத்திருக்கவும் முடியாது. எனவே கடன் சுமைக்கு ஆளாகித் துன்பப்படுகின்றனர்.

வரதட்சிணை அதிகமாகப் பாதித்தது பெண்களைத் தான். வயது ஏறியும் திருமணம் ஆகாமலே காலம் கழிக்கும் பெண்கள் எத்தனையோ! நெருக்கடி உண்


டானால், சில மிகைகள் நடப்பது எந்தச் சமூகத்திலும் இயல்பு. அதன்படி நம் பெண்கள் வேறு குலத்தோரை வரதட்சிணைத் தொல்லை இல்லாமல் திருமணம் செய்து கொண்ட நிகழ்ச்சிகளும் நடந்திருக்கின்றன. அது நம் சமூகக் கட்டுக்கோப்பிற்கும் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் இழுக்கு அல்லவா?

இவ்வாறு நம் சமுதாயத்தைப் பாதிக்கும் பிரச்சினையாக, வரதட்சிணைப் பிரச்சினை உருவாகி விட்டதை, அண்ணன், நீங்கள் சிறிது ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனி ஒரு குடும்பத்திற்கு வருமானம் கிடைக்கின்றது என்பது பற்றிய பிரச்சினை அல்ல இது. இது நீங்க வேண்டுமானால் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி அடுத்த மடலில் தொடர்வேன்.

அன்புள்ள
மணிவண்ணன்

தேவகோட்டை - திருச்செந்தூர் பாதயாத்திரை

தேவகோட்டையிலிருந்து திருச்செந்தூருக்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் பாதயாத்திரை அன்பர்கள் பதினன்காம் ஆண்டாக 2-5-90 அன்று புறப்பட்டு 9-5-90 அன்று காலையில் திருச்செந்தூருக்கு இனிதே சென்று மாலையில் காவடி பாற்குடங்கள் செலுத்தி இனிதே செந்திலாண்டவனை வழிபட்டனர். தேவகோட்டை - திருச்செந்தூர்ப் பாதயாத்திரை அமைப்பினைச் சேர்ந்த அருள்தொண்டர் திரு. சந்திரசேகரன் இசைத்தொண்டர் திரு. ந. காசிநாதன் இசைத்தொண்டர் திரு. இராம. இலட்சுமணன் ஆகியோர் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர். வழியில் தூத்துக்குடி ஆத்தூர், திருநெல்வேலி திருச்செந்தூர் நகரத்தார்கள் வரவேற்று உபசரித்தனர்.



கண்டவராயன்பட்டி ஊராட்சித் தலைவர் திரு. நா. அருணசலனின் 80ஆவது பிறந்த தின விழா 7-4-90 அன்று பிள்ளையார்பட்டியில் நிகழ்ந்த போது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அன்னரைப் பாராட்டி பொன்னடை போர்த்திய காட்சி.

தி. காசியைப் பாராட்டுகிறோம்

கொப்பனாபட்டியைச் சேர்ந்த மாணவர் தி. காசி புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல் நிலைப் பள்ளியில் படித்து, கடந்த மார்ச் 90ல் நடைபெற்ற +2 தேர்வில் 1200க்கு 1095 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதல் மாணவராகவும் புதுக்கோட்டைக் கல்வி மாவட்டத்தில் இரண்டாவது மாணவராகவும் வெற்றி பெற்றுள்ளார். இவர் +2 தேர்வில் கணிதத்தில் 198ம் வேதியியலில் 199ம் இயற்பியலில் 184ம் உயிரியலில் 185 மதிப்பெண்களும் பெற்றுள்ளார்.



தி. காசி பாளக்குறிச்சி புனித ஜேம்ஸ் மேல்நிலைப் பள்ளியில் படித்து 1988 மார்ச் மாதம் நடைபெற்ற S. S. L. C. தேர்வில் 500க்கு 470 மதிப்பெண்கள் பெற்று கரூர் கல்வி மாவட்டத்தில் முதல் மாணவராகவும், மாநிலத்தில் ஏழாவது மாணவராகவும் வெற்றி பெற்று தமிழக அரசின் நற்சான்று பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாணவர் கொப்பனாபட்டி திரு. அ. ந தியாகராஜன் - திருமதி தி. விசாலாட்சி ஆச்சியின் இரண்டாவது புதல்வராவார். இம்மாணவர் கல்வியில் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் அவரது திறமையையும் பாராட்டுகிறோம்.

திருச்சியில் நகரத்தார் இளைஞர் அணி

'நம்மவர் உயர நாம் உழைப்போம்' என்ற கொள்கையுடன் திருச்சியில் உள்ள நகரத்தார் இளைஞர்கள் ஒன்றுகூடி, திருச்சி நகரத்தார் சங்கத்தின் ஆதரவுடன் 30-4-90 அன்று பெமீனு ஹோட்டலில் நடைபெற்ற விழாவில் 'திருச்சி நகரத்தார் இளைஞர் அணி' என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினார்கள். நகரத்தார் இளைஞர் அணித் தலைவர் திரு. நா. அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், இளைஞர் அணித் துணைச் செயலாளர் திரு. பழ. முத்தையா இளைஞர் அணியை அறிமுகம் செய்ய, வந்திருந்த சிறப்பு விருந்தினர்களை இளைஞர் அணி நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. சுப. அருணாசலம் அறிமுகம் செய்து வைத்தார். திருச்சி நகரத்தார் சங்கத் தலைவர் திரு. சுப அருணாசலம் செட்டியார், மதுரை வங்கியின் தலைமை அலுவலர் திரு மு. உடையப்பன் திருச்சி சீதாலெட்சுமி மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி கரு. மீனாள், மதுரை வங்கி அதிகாரி திருமதி உமையாள் முத்து முதலியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர், "கல்கண்டு" இதழின் துணை ஆசிரியர் திரு. லேனா. தமிழ்வாணன் சிறப்புரை ஆற்றினார். நமது சமூகத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய மாற்றங்கள் பற்றியும், அதில் இளைஞர்களின் பங்கு பற்றியும் அனைவரும் சிறப்புற எடுத்துக் கூறினார்கள். இறுதியில், இளைஞர் அணிச்செயலர் திரு. அ. வெள்ளையன் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

கோனபட்டு நகரச் சிவன் கோவிலின் குடநீராட்டு விழா

கோனபட்டு நகரச் சிவன் கோவிலின திருப்பணி வேலைகள் முற்றுப் பெற்று 29-4-90 ஞாயிற்றுக்கிழமை காலையில் குடநீராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

குடநீராட்டையொட்டி 26-4-90 அன்று ஒரு காலமும் 27-4-90 அன்று இரண்டு காலங்களும் 28-4-90 அன்று இரண்டு காலங்களும் 29-4-90 குடநீராட்டு தினத்தன்று ஒரு காலமும் ஆக 6 காலங்கள் யாக சாலைப் பூஜைகள் நடைபெற்றன.

குடநீராட்டையொட்டி 28-4-90 சனிக்கிழமை இரவு 7 மணி அளவில் தொழிலதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையில் தமிழாகரர் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் நடுவராக இருக்க ''நகரத்தார் பெருமக்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டது சமயப்பணியே தமிழ்ப்பணியே'' என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நடைபெற்றது. திருவாளர்கள் கதி சுந்தரம், பழ முத்தப்பன், கா. நாகப்பன், திருமதி சி எஸ். விசாலாட்சி, சௌந்தரவல்லி ஆகியோர் வாதிட்டனர். நடுவர் 'தமிழ்ப் பணியே' என்று தீர்ப்பு வழங்கினர்.

குடநீராட்டு விழாவன்று காலையில் 'சைவ சித்தாந்த வித்தகர்' திரு. முரு பழ இரத்தினம் செட்டியார் அவர்கள் 'பெரிய புராணம்' என்ற தலைப்பில் இலக்கியப் பேருரை ஆற்றினர்கள்.

29-4-90 ஞாயிறு இரவு 7 மணி அளவில் ''மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் முன்னிலையில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் ''மங்கலப் பொருட்கள்'' என்ற பொதுத் தலைப்பில் கவியரங்கம் நிகழ்ந்தது. கவிஞர்கள் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் திரு. அரு நாகப்பன், திரு. சிவல்புரி சிங்காரம், திரு. இராகவன் முத்து, டாக்டர் திரு. சபா. அருணசலம் ஆகியோர் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர்.

அன்று இரவு பஞ்சமூர்த்தி திருவுலாக் காட்சியும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

திரு. எஸ். முருகப்ப செட்டியார் அவர்களைத் தலைவராகவும் திரு. இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்களைத் துணைத் தலைவராகவும் திரு. எஸ். சுப்பையா செட்டியார் அவர்களைச் செயலாளராகவும் திரு. என். கே. இராமையா செட்டியார் அவர்களையும் திரு. சித. மெய்யப்ப செட்டியார் அவர்களையும் பொருளாளராகக் கொண்ட திருப்பணிக் குழு கோனபட்டு நகரத்தார்களிடம் பணம் வசூலித்தும் குட நீராட்டு மலருக்கு மதுரை, திருச்சி, சேலம், சென்னை, கோவை ஆகிய நகரங்களுக்குச் சென்று நிதி வசூலித்தும் குட நீராட்டு விழாவைச் சிறப்பித்தனர். எல்லா நகரத்தார்களின் ஒத்துழைப்புடன் குடநீராட்டு விழாச் சிறப்பாக நடந்தேறியது.

பட்டினத்தடிகள் திருவிழா

காவிரிப்பூம்பட்டினம் ஸ்ரீபட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா இவ்வாண்டு ஆடி மீ 11 உ (27-7-90) வெள்ளிக்கிழமை தொடங்கி ஆடி மீ 22 உ (7-8-90) செவ்வாய்க்கிழமை வரை 12 நாட்கள் நடைபெற உள்ளது. 3-8-90 வெள்ளியன்று திருவிளக்குப் பூஜை.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ பலவான்குடி நகரச் சிவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 3-6-90 ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ அலவாக்கோட்டை அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேசுவரர் திருக்கோயிலின் முதல் வருஷாபிஷேக விழா 27-5-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ கிழச்சிவல்பட்டியிலிருந்து வைத்தீஸ்வரன் கோவிலுககுப் பாதயாத்திரை சென்ற மெய்யன்பர்களுக்கு 22-4-90 அன்று திருவலஞ்சுழியில் கும்பகோணம் நகரத்தார்கள் காலைச் சிற்றுண்டி வழங்கினார்கள்.

ஃ திருப்பெருந்துறை ஆத்மநாதன் - யோகாம்பிகை அம்மன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 10-6-90 (வைகாசி மீ 27 உ) அன்று நடைபெற உள்ளது.

ஃ கல்லல் ஆ. மு. ஆ. முரு. பழ குழந்தைவேலு செட்டியார் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் மருத்துவ முகாம் 11-5-90 வெள்ளியன்று கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

ஃ தமிழ்ச் செம்மல், மூதறிஞர் முனைவர் வ. சுப. மாணிக்கனாரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் 29-4-90 ஞாயிறு மாலை மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் கொண்டாடப்பெற்றது.

ஃ முனைவர் வ. சுப. மாணிக்கனார் திருவுருவப் படத் திறப்பு விழா 20-5-90 அன்று பாண்டிச்சேரி ஆனந்தா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஃ மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் முனைவர் வ. சுப. மாணிக்கனார் நினைவு நாளை ஆண்டுதோறும் கொண்டாட நெற்குப்பை தமிழன்பர் திரு. இராம. விசுவநாதன் அறக்கட்டளை ஒன்றை நிறுவி பொருள் நன்கொடையளித்திருக்கிறார்.

ஃ பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் முனைவர் வ. சுப. மாணிக்கனார் நினைவாக மணிவாசகர் பதிப்பகத்தின் உரிமையாளரும் பேராசிரியருமான முனைவர் ச. மெய்யப்பனார் அவர்கள் 'மாணிக்கம் மெய்யப்பன்' என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றை நிறுவியிருக்கிறார்கள்.

ஃ நகரத்தார் புத்தக வங்கியைச் சேர்ந்த இளைஞர்கள் நகரத்தார் முன்னேற்றம், கல்வி உதவி, தொழில் உதவி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு 4-6-90 முதல் 10-6-90 வரை செட்டி நாட்டில் உள்ள 76 ஊர்களுக்கும் சைக்கிள் பேரணி நடத்த விருக்கிறார்கள்.

ஃ காளையார் கோவில் ஸ்ரீ சௌந்தர நாயகியம்பாள் ஸமேத ஸ்ரீ சோமேசுவரர் திருக்கோயில் வைகாசித் திருவிழா 28-5-90 தொடங்கி 6-6-90 வரை நடைபெற உள்ளது. 6-6-90 புதன் கிழமை இரவு தெப்பம்.

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோயிலின் வைகாசித் திருவிழா 29-5-90 முதல் 7-6-90 வரை பத்து நாட்கள் நடைபெற உள்ளது. 5-6-90 செவ்வாயன்று மாலை வெள்ளி ரதம். 6-6-90 வைகாசி விசாகத்தன்று காலையில் தேரோட்டம்.

ஸ்ரீ சக்கரத்தாழ்வார் பதிகம்

காத்தருள் கடவுள் ஆன
கண்ணனார் கைத்த லத்துள்
பூத்திடும் வாழ்வு பெற்ற
புண்ணியத் திகிரி யாரே!
வார்த்தையாம் மலர்கள் தூவி
வணங்குவோம்! எம்மை நாளும்
சேர்ந்தெழும் அடியர் ஆக்கிச்
சேமங்கள் நல்கு வீரே! 1

மங்கலக் காட்சி என்னும்
மாண்பொருள் பேரைத் தாங்கிப்
பொங்கிடும் சீர்த்தி பெற்ற
புண்ணியத் திகிரி யாரே!
செங்கரும்(பு) அனைய பாட்டுச்
சீர்த்தமிழ்ப் பாலின் ஆட்டி
இங்(கு) உமைப் பணிகின் றேமால்
இன்பெலாம் இசைவிப் பீரே! 2

சக்கரத்(து) ஆழ்வார் என்னும்
தனிப்பெரும் சீர்த்தி கொண்டீர்!
கொக்கரித்(து) எழுந்தே ஆடும்
குறுமதிப் புல்லர் கூட்டம்
அக்கணம் அழியும் வண்ணம்
அருளறம் இயற்றி னாற்போல்
இக்கணம் எம்மை வாட்டும்
இடரெலாம் நீக்கிக் காப்பீர்! 3



ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

ஆயிரம் கோடி மின்னல்
அருளுடன் தோன்று மாப்போல்
மாயவன் கண்ணன் எங்கள்
மன்னவன் ஆணை யாலே
நேயமார் நல்லோர் வாழ
நிமிர்ந்தெழு திகிரி யாரே!
தூயஎம் நெஞ்சைச் சூழும்
துயரெலாம் நீக்கிக் காப்பீர்? 4

அணிமயில் பீலி வாழும்
அழகுயர் மோலிக் கண்ணன்
கனிமொழி ஏவ லாலே
காத்திடக் களத்து நிற்கும்
தனிஒளித் திகிரி யாரே!
தாயென எம்மைத் தாங்கி
நனிதுயர் யாவும் நீக்கி
நலமழை பொழிகு வீரே! 5

கருமையார் மேனிக் கண்ணன்
கரமெனும் கமலப் போதில்
பெருமையாய் வாழ்த லாலே
பீடுயர் திருவை ஒத்தீர்!

உரிமையாய்த் தமிழின் மாலை
உமக்குநாம் சூட்டி நின்றோம்
வெறுமையாம் பழமை நீக்கி
விருப்பெலாம் விளைய வைப்பீர்! 6

கதியினை நல்கும் கண்ணன்
கரமிளிர் திகிரி யாரே!
புதிர்களை விடுவிப் பீர்உம்
பொன்னடி போற்றி நின்றோம்!
சதியுடன் சூது செய்யும்
சமர்த்தர்கள் சூழ்ச்சி மாற்றி
விதியினை இனிய தாக்கி
விழுத்துணை புரிகு வீரே! 7

தருமத்தை மறந்த துன்பம்
தந்தைதாய்ப் பணியாத் துன்பம்
கருமத்துப் பயனும் துன்பம்
கடுஞ்சொலின் விளைந்த துன்பம்
வரும்மொத்தத் துன்பம் எல்லாம்
மனம்வைத்து மாற்று வீரே
தருமத்தின் வேந்தன் கண்ணன்
தளிர்கரத் திகிரி யாரே! 8

திருமகள் நோக்க வைப்பீர்!
தீமைகள் நீக்கி வைப்பீர்!
பெருமைகள் ஆக்கி வைப்பீர்!
பெரும்புகழ் ஊக்கி வைப்பீர்!
உரிமையாம் தமிழின் மாலை
உவந்துநீர் ஏற்றுக் கொள்வீர்!
திருமகள் கேள்வன் கண்ணன்
திருக்கரத் திகிரி யாரே! 9

துடித்திடத் தீமை சொல்லும்
தூர்த்தர்கள் திருந்த வைப்பீர்!
நடித்திடும் கயவர் தங்கள்
நாடகம் முடித்து வைப்பீர்!
வடித்திடும் காதல் மாலை
மகிழ்வுடன் ஏற்றுக் காப்பீர்!
மிடித்துயர் மாற்றும் கண்ணன்
மென்கரத் திகிரி யாரே! 10

— கவிஞர் இராகவன்முத்து

தமிழண்ணல்
புதல்வி திருமணம்

நெற்குப்பையைச் சேர்ந்த தமிழறிஞர் முனைவர் தமிழண்ணல் என்கிற இராம. பெரியகருப்பன் அவர்களது புதல்வி செல்வி முத்துமீனாள் B. A. க்கும் நெற்குப்பை ராம. சா. கரு. கரு. சுப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் பழநியப்பன் B. Com. க்கும் நெற்குப்பையில் 28-5-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. லெட்சுமணன் பதிவாளர் திரு. சிவசங்கரன் மற்றும் மதுரை, திருச்சி, தஞ்சை, சென்னை, சிதம்பரம் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி -யைச் சேர்ந்தவர்கள் தமிழறிஞர்கள், தமிழன்பர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உங்கள் குரல்

கனியின் சுவையினைக் கனி விளையும் காலங்களில் மட்டுமே சுவைக்கலாம். ஆனால் ''நகரத்தார் குர'' லையோ திங்கள் தோறும் சுவைக்கலாம். ''செய்திகள் வாசிப்பவர்...'' பகுதி மூலம் பல அரிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.

இராம. அலமேலு

திருவெறும்பூர்

கடன் வாங்கி இப்படி விளம்பரமும் செய்துவிட்டு 'எங்களைப் பிற்பட்ட இனம் என்று அறிவியுங்கள்' என்றால் எவன் ஒப்புக்கொள்வான்? - என்ற தமிழண்ணல் அவர்களின் - ''நானும் ஒரு நகரத்தார்'' கட்டுரையின் கருத்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

ஆர்எம். வி. இராமசாமி

கோட்டையூர்.

மதுரை வங்கியின் தலைவர் திரு சுப. சபாபதியின் பேட்டி சிறப்பாக இருந்தது. நம்மில் நலிந்தோர் தொழில் செய்ய, சிபாரிசு இல்லாமல் கடன் கொடுக்க அவர் முன்வந்திருப்பது அவரது கருணை உள்ளத்தைக் காட்டுகிறது 'முன்னாள் தலைவர் திரு எல். கிருஷ்ணன் பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்ததுபோல் இவரும் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

சுப. சா. பழநியப்பன்

ஆவினிப்பட்டி

மே' 90 இதழில் வெளியாகி உள்ள மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதியின் பேட்டி அருமையோ அருமை! அது ''குர'' லுக்குப் பெருமையோ பெருமை! அவர் கூறியுள்ளது போல் இளைஞர்கள் சுய தொழில் மூலம் வருமானம் ஈட்டினால் தீர்ந்துவிடும் வறுமையோ வறுமை!

'ஹால்ஸ்' நாராயணன்

கண்டவராயன்பட்டி

''நகரத்தார் குரல்'' வீசைக்குப் போடப்படக்கூடாத இதழ்' என திரு. லேனா தமிழ்வாணன் ஒரு முறை தனது பேட்டியில் கூறியிருந்தார். அது உண்மை தான். ''குரல்'' பல நல்ல செய்திகளை கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. பல செய்திகளை குறிப்புக்களை திரும்பப் பார்க்க விரும்புவோர் அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்தால் நல்லது.

ஆ. முத்துராமன்

திருச்சூர்

தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களுக்கு திரு. சபாபதி அவர்களின் பேட்டி பயனுள்ளதாக இருக்கிறது. பாராட்டுக்கள். ''குர''லில் சிறு தொழில் மைய முகவரி, பதிவு செய்யும் முறை, அரசு மானியம் பெற வழிமுறை போன்றவற்றை வெளியிட்டால் நம்மவர்கள் முன்னேற உதவியாக இருக்கும்.

எம். ராகவி, எம். விசாலாட்சி

சேலம்

திரு. சபாபதியின் பேட்டி இளைஞர்களைச் சிந்திக்க வைத்திருக்கிறது. எவ்விதச் சிபாரிசுமின்றி நேர்மைக்கும் அனுபவத்திற்கும் மதுரை வங்கி எப்போதும் உதவி செய்யும் என அவர் கூறியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. பேட்டி கண்ட காரைக்குடி கல்யாணி அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

'ப்ளோரா' பழனிக்குமார்

கண்டவராயன்பட்டி

மே' 90 இதழ் முகப்பு அட்டையில் கொப்புடைய நாயகியை அழகுறக் கண்டோம். மே' 90 இதழ் 40 பக்கங்களும் நல்முத்துக்கள். பக்கங்கள் கூடாதா? பதில் தரக் கூடாதா?

கவிஞர் சேது அருணாசலம்

தேவகோட்டை

மே'90 ''நகரத்தார் குர''லில் முனைவர் தமிழண்ணல் அவர்கள் எழுதியுள்ள ''நானும் ஒரு நகரத்தார்' கட்டுரையில் 'நம் பெரியவர்கள் பலர் சாமான் பரப்புவதைத் தடுக்க அறப்போராட்டம் நிகழ்த்தியதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்' எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வருத்தம் தரக்கூடியது. 23-1-84 & 24-1-84 ஆகிய இரு நாட்களும் மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தினர் பல ஊர்களுக்கும் சென்று 'சாமான் பரப்பாதீர்' என அறப் போராட்டம் நடத்தினர். இது தமிழண்ணல் அவர்களின் ஊரான நெற்குப்பையிலும் நிகழ்த்தப்பட்டது. இன்று போராட்டம் வேண்டாம் அவரவராக உணர்ந்தால் போதும் என அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நகரத்தார்கள் உணர்வதற்குள் நகரத்தார் சமூகமே அழிந்து போய் விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பழ. இராமசாமி

மதுரை

விழுப்புரம் சங்கத்திற்கு நிர்வாகிகள் தேர்வு

விழுப்புரம் நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 15-4-90 அன்று திரு. நா. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அப்போது 1990-91 ஆம் ஆண்டிற்கு கௌரவத் தலைவராக திரு. ஆர். எம். முத்தப்ப செட்டியாரும் தலைவராக திரு. நா. இலட்சுமணன் செட்டியாரும் துணைத் தலைவராக திரு. கே. ஆர் கணபதி செட்டியாரும் செயலாளராக திரு. ஏ.ஆர். மெய்யப்பனும் இணைச் செயலராக திரு. கே. ஆர். சின்னையா செட்டியாரும் பொருளாளராக திரு. எல். ஆர்எம். முத்துக் கருப்பன் செட்டியாரும் மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை நெடுஞ்சாலையில் கணபதி நகரில் விழுப்புரம் நகரத்தார் சங்கக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா 7-5-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

நகரத்தார் புத்தக வங்கி

மதுரை நகரத்தார் புத்தக வங்கி இந்த ஆண்டும், கல்லூரிகளில் படித்து வரும் நகரத்தார் மாணவர்களுக்குப் புத்தகங்களை வழங்க இருக்கிறது. மாணவர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை 30-6-90க்குள் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப் பெற்றுள்ளது.

கூட்டுத் திருமணம்

திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியில் 2-9-90 (பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள் 17ஆம் நாள்) ஞாயிறன்று பிள்ளையார்பட்டியில் கூட்டுத்திருமணங்கள் நடைபெற உள்ளன.

அன்று பத்துத் திருமணங்களை நடத்த ஆவல் கொண்டிருப்பதாகவும் கூட்டுத் திருமணங்களில் பங்கு கொண்டு பையனுக்கோ பெண்ணுக்கோ திருமணம் செய்து வைக்க விரும்பும் பெற்றோர்கள் கீழ்க்காணும் சங்கத்து முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நகரத்தார் சங்கம்
2 ஒத்தமால் தெரு
திருச்சிராப்பள்ளி-620 002

நேரத்தை வீணுக்காமை

அண்மையில் காரைக்குடிக்கு மதுரையிலிருந்து பேருந்தில் பயணம் செய்தேன். என இருக்கைக்கு இரண்டு வரிசைகள் முன்பாக ஒரு பெரிய செட்டியார் இருந்தார். அது, இருவர் அமரும் இருக்கை. செட்டியார் அருகில் ஒரு மிடுக்கான மனிதர்- ஆங்கிலப் பாணி உடைகள். இருவரும் பேசிக் கொள்ள இல்லை. செட்டியார் - ஒரு புதிய (கோடித்) துண்டு- தலை துவட்டும் துண்டை- எடுத்து மடியில் வைத்துக்கொண்டு கரையில் உள்ள இழைகளை முடிந்து கொண்டே வந்தார். காரைக்குடியில் இறங்கும் போது துண்டு முழுவதும் இருபுறமும் 'கரை முடிதல்' வேலை முற்றுப் பெற்றிருந்தது. இரண்டுமணி நேரப் பயணத்தில் ஒரு மணிநேரம் உறங்கிக் கெடுக்கும் நான், பெரிய செட்டியாரைப் பார்த்து வியந்தேன்.

— கவிஞர் இராகவன்முத்து

பாஸ்போர்ட், விசா, கப்பல், விமான டிக்கெட்டுகள் உள்நாடு, வெளிநாடு சுற்றுலாக்களுக்கும், தங்கும் வசதி, நான்கு வேளை ஆகாரம் முதலியவைகளுடன் பேருந்து சுற்றுலாவிற்கும் அணுக வேண்டுகிறோம். பள்ளி, கல்லூரி மற்றும் குரூப்பாகச் செல்பவர்களுக்குச் சலுகையுடன் குறிப்பிடும் தேதியில் சிறப்பாகச் சுற்றுலா நடத்திக் கொடுக்கிறோம்.

விவரங்களுக்கு :

SUBAM TRAVEL AGENCY

சுபம் டிராவல் ஏஜன்ஸி


22-6, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

Prop : செ. சுப்பிரமணியன்

செட்டிநாட்டரசரின் செயலர் ஏஆர். ராமசாமி இல்லத் திருமண விழா

ஆத்தங்குடி ஏஆர். ராமசாமி- மீனாட்சி ஆச்சியின் புதல்வன் திருவளர் செல்வன் இராம. வெங்கடாசலம், B.Com., M.B.A க்கும் (சப் மேனேஜர், மதுரை கோட்ஸ், சென்னை) குருவிக்கொண்டான் பட்டி அ. சொ. தெ. சொ. சொக்கலிங்கம் செட்டியார் - மந்தக் காப்பு (மலேசியா) அவர்களின் பேத்தியும் சொ. தேனப்ப செட்டி யார் (மேனேஜிங் டைரக்டர், மேனகா காட்டன் மில்ஸ், மதுரை) மேனகா ஆச்சி அவர்களின் புதல்வி திருவளர் செல்வி சிவகாமி B.Aக் கும் குருவிக்கொண்டான்பட்டியில் 16-5-90 அன்று செட்டிநாட்டர சர், அண்ணுமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் திரு. எம். ஏ. எம். ராமசாமி அவர்களின் முன்னிலையில் திருமணம் சிறப்புடன் நடை பெற்றது. திருமண விழாவிற்குப் பின்னர் சென்னை நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்கும் திரளான பெருமக்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

விழாவிற்கு நாடாளுமன்ற முன்னுள் உறுப்பினர் ஆர். ராமனு தன் செட்டியார், தொழிலதிபர் எம் ஏ. சிதம்பரம் செட்டியார் அவரது துணைவியார் அபிராமி ஆச்சி குமார ராணி மீனு முத்தையா, திருமதி சிகப்பி ராமசாமி, ஏ, சி. முத்தையா - தேவகி ஆச்சி, சீதா சிதம்பரம், திரு வடிவேலு மற்றும் குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி கோகுலகிருஷ்ணன், கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி மோகன் உச்ச நீதிமன்ற நீதிபதி ரத்தினவேல் பாண்டியன், நீதிபதிகள் ரத்தினம், வெங்கடசாமி, பாஸ்கரன், ராமலிங்கம், சுவாமிதுரை, சதார்சையது, அரசு வழக்குரைஞர் ஏஆர் லட்சுமணன், அமைச் சர் பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் வை. கோபால்சாமி,



மணமக்களுடன் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களும் திரு. ஏஆர். இராமசாமி திரு. சொ. தேனப்ப செட்டியார் மற்றும் பலரும்.

தென்னரசு, குன்றக்குடி அடிகளார் முன்னுள் அமைச்சர்கள் ஆர். எம் வீரப்பன், எஸ். டி. சோமசுந்தரம், உத்தரபிரதேச முன்னுள் ஆளுநர் கோபால்ரெட்டி, மீனாட்சி அம்மன் கோவில் முன்னுள் தக்கார் வி. என். சிதம்பரம், ம. பொ. சி, ஜி. கே. மூப்பனர், வேணு தமிழ்வாணன், லலிதா காமேஸ்வரன், ஞானதேசிகன், நீதிபதி இஸ்மாயில் தொழிலதிபர் எம். வி. அருணசலம், காரைக்குடி நகர் மன்றத் தலைவர் சித சிதம்பரம், இந்தியன் வங்கி சேர்மன் எம். கோபாலகிருஷ்ணன், பாங்க்ஆப் மதுரை சேர்மன் எஸ்பி. சபாபதி, பாரத ஸ்டேட் வங்கி பொது மேலாளர் ஆர். கந்தசாமி, தமிழக அரசு உயர் அதிகாரிகள், அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் கற்பககணபதி, அஞ்சல் வழித்துறை தலைவர் வி. அய்யாக் கண்ணு, தேர்வாணையர் சொக்கலிங்கம், பேராசிரியர்கள், அதிகாரி கள், அலுவலர்கள் மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சி. பாலசுப்பிரமணியம், பாரத ஸ்டேட் வங்கி அதிகாரிகள் சங்கத் தலைவர் செல்லம், இந்தியன் வங்கி அதிகாரிகள் சங்கத் தலைவர் கே. என். கண்ணன், தொழிற்சங்கத் தலைவர் ராம. வெள்ளையன், திரைப் பட அதிபர் உமாபதி, எஸ்பி. முத்துராமன், இராம. நாராயணன், டாக்டர் ஆர். எஸ். ராஜகோபால், மதுரை கோட்ஸ் உயர் அதிகாரி கள் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு வாழ்த்திச் சிறப்பித்தனர். தமிழக ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாந்தர் மற்றும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக அமைச்சர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

திருமண விழாவினை ஒட்டி வலையபட்டி ஏஆர். சுப்பிரமண்யம், ஜெய்சங்கர், திருவிடைமருதூர் பி. எஸ். ராஜா குழுவினர் ஆகி யோரின் நாதஸ்வரக் கச்சேரியும், அண்ணுமலைப் பல்கலைக் கழக இசைத்துறை மாணவர்களின் வயலின் கச்சேரியும், சீர்காழி சிவசிதம் பரத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றன. திருமண விழா விற்கு வந்திருந்தவர்களை டாக்டர் ஏஆர். அழகப்பன், ஏஆர். சொக்கலிங்கம், வி' எஸ்டி. பிஎல். சிதம்பரம், டாக்டர். ஆறுமுகம் ஆர்எம். ராசேந்திரன், ஆர்எம். நடராசன், ஆகியோர் வரவேற்ற னர்.

திருமணம்

ஆவினிப்பட்டி பழ. சின்னக் கருப்பன் என்கிற கருப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் பழநியப்பன் என்கிற சுந்தரம் M.Com.க்கும் ஆவினிப் பட்டி சி. மு. சுப. முத்தையா செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி வள்ளியம்மை என்கிற மோகனவுக்கும் 28-5-90 திங்க ளன்று காலையில் ஆவினிப்பட்டி யில் திருமணம் சிறப்பாக நடை பெற்றது

திருமணத்தையொட்டி 'மீனட்சி திருமைந்தன்' திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் வாழ்த் தரங்கம் நடைபெற்றது. மண மக்களை வாழ்த்தி கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப் பன். புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் ஆகியோர் பேசி னர். மதுரை நகரத்தார் சங்கத் தின் தலைவர், தொழிலதிபர் திரு. எல். நாராயணன் செட்டியார் அவர்களும் திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி னர்கள்.

திருமணத்திற்குத் தொழில திபர்கள், வணிகர்கள் நண்பர் கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காரைக்குடியில் திருமண மண்டபத் திறப்பு விழா

காரைக்குடி செக்காலை சாலையில் வருமானவரி அலுவலகம் அருகே புதிதாகக் கட்டப் பெற்றுள்ள முத்தம்மாள் ஆச்சி சிதம்பரம் செட்டியார் திருமண மண்டபத்தின் திறப்பு விழா 30-4-90 அன்று காலையில் சிறப்பாக நிகழ்ந்தது.

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிட்டின் முது நிலை மேலாளர் 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்ந்த. ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட்டின் நிர்வாக இயக்குநர் திரு. ஆர்எம். அருணாசலம் செட்டியார் அவர்கள் தலைமையில் அவர்களது துணைவியார் திருமதி அ மீனாட்சி ஆச்சி அவர்கள் திருவிளக்கேற்றி வைத்துச் சிறப்பித்தார்கள்.

விழாவில் காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், கவிஞர் திரு. சிவல்புரி சிங்காரம் மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திரு. என். ராமசிதம்பரம் என்ற கண்ணன் நன்றி கூறினார்.

திருமணம்

கண்டனூர் நா. அரு. கா. அருணாசலம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வள்ளியம்மை என்ற லெட்சுமிக்கும் விராமதி வயி வயி. வயிரவன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் பழநியப்பனுக்கும் 13-5-90 அன்று கண்டனூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இயற்கை எய்தினார்



நெற்குப்பை ந. பழ. மு. ராம. மு. சிங்காரம் செட்டியார் அவர்களது துணைவியாரும் மதுரை லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸின் உரிமையாளருமான திருமதி இராமாயி ஆச்சி அவர்கள் தமது 60 ஆவது வயதில் 14-5-90 திங்கட்கிழமை இரவு 9 மணி அளவில் மதுரையில் இயற்கை எய்தினார்கள். அவர்களது பூத உடல் தத்தனேரி மயானத்தில் 15-5-90 அன்று எரியூட்டப்பட்டது.

திருமதி இராமாயி ஆச்சி அவர்களுக்கு திரு. சி. முத்துராஜா, திரு சி. காசிராஜா என் இரு புதல்வர்களும் திருமதி ந. குணசுந்தரி என்கிற புதல்வியும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

இயற்கை எய்தினார்கள்

எங்கள் தாயாரும் வலையபட்டி நா. செ. லெட்சுமணன் செட்டியார் அவர்களது மனைவியுமான திருமதி தெய்வானை ஆச்சி அவர்கள் 29-4-90 அன்று தமது 72 ஆவது வயதில் இயற்கை எய்தினார்கள் என்பதையும் அவர்களைப் பிரிந்த 22 ஆவது நாளில் (21-5-90 அன்று) எங்கள் தந்தையாரும் அவர்களது கணவருமான நா. செ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் இயற்கை எய்தினார்கள் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

தமயந்தி, மீனாட்சி, வசந்தா, இந்திரா
(மகள்கள்)

செல்லப்பன் B. Com. (மகன்)

மற்றும் பேரன், பேத்திகள்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

Regd. No. TN/MA/(C)/106 NAGARATHAR KURAL

With best compliments from :


M/s. PANS Auto Products

13-B, North Veli Street

MADURAI-625 001



MALAX



Radiator Hoses

M/s. Hema Agencies

Madurai & Madras